IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 140/2013

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of September, 2025.

வாதி கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ததன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்தானது என் தாத்தா ராஜீமேஸ்திரியால் சம்பாதிக்கப்பட்ட சொத்தா என்று கேட்டால் பாதி சொத்தானது என் தாத்தாவால் சம்பாதிக்கப்பட்டது. ஒரு சில சொத்தானது அவர் ஆர்மியில் இருந்ததால் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்தாகும்.

2. மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள சர்வே எண்.285/2, 4 ஏக்கர் 0.40 செண்ட், தீர்வை 4.66 என்ற சொத்தானது என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான். சாட்சி மாற்றி இல்லை அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்து என்று கூறுகிறார். சர்வே எண்.285/1ஏ ல் விஸ்தீரணம் 0.85 செண்ட், தீர்வை 0.90 சொத்தானது என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தாகும். சர்வே எண்.284, விஸ்தீரணம் 0.46 செண்ட் இதில் பொதுவில் 0.15 செண்ட் என் தாத்தா வாங்கிய சொத்து என்றால் சரிதான்.

3. சர்வே எண்.275, 0.98 செண்ட் இதில் பொதுவில் 0.33 செண்ட் என் தாத்தா வாங்கிய சொத்தா என்றால் சரிதான். சர்வே எண்.276, 3 ஏக்கர் 0.43 செண்ட் பொதுவில் 0.48 செண்ட் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.287/2, 2 ஏக்கர் 0.18 செண்டில்

பொதுவில் 0.73 செண்ட் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான்.

4. சர்வே எண்.304/3, 2 ஏக்கர் 0.21 செண்ட் இதில் பொதுவில் 0.74 செண்ட் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான். சர்வே எண்.305, 0.32 செண்ட் இதில் பொதுவில் 0.11 செண்ட் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான். சர்வே எண்.294/1, 3 ஏக்கர் 0.68 செண்ட் இதில் மத்தியில் 1 ஏக்கர் 0.84 செண்ட் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான். சர்வே எண்.304/3 ல் முரம்பு சதுர கிணறு ஒன்றில் 1/3 பாகம் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான்.

5. சர்வே எண்.288, முரம்பு குண்டு கிணற்றில் 1/4 பாகம் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்தா என்றால் சரிதான். ராஜீமேஸ்திரியின் அப்பாவான பெரியப்பு எனக்கு தெரியும். பெரியப்புவின் அப்பாவின் பெயரி பண்டுமுனி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நான் என் தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்துகள் என்று குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் உள்ள சொத்துகள் அனைத்தும் என் தாத்தாவிற்கு பூர்விகமாக கிடைத்த சொத்துகள் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 3 தலைமுறை முடிந்து நாங்கள் 4 வது தலைமுறை என்பதால் தாவா சொத்தை கூட்டு உரிமையாளர் என்ற முறையில் தான் பிரிக்க முடியும் என்று சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனென்றால் என் தாத்தா ராஜீமேஸ்திரி வரை மட்டும் தான் எனக்கு தெரியும். அதற்கு முந்தைய உரிமையாளர்கள் பற்றி எனக்கு தெரியாது. சொத்தானது கூட்டு உரிமையாளர் சொத்து என்பதால் அனைவருக்கும் உரிமை உண்டு

என்றும் அவருக்குண்டான பாகம் பிரிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

7. பெரியப்பு அதாவது என் தாத்தாவின் அப்பா இறக்கும்போது என் தாத்தாவின் பெயருக்கு ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எழுதிவைக்காத நிலையில் ராஜீமேஸ்திரி செட்டில்மெண்ட் எழுதிவைக்க முடியாது என்று சொன்னாலும் அவ்வாறு எழுதி வைத்தால் அது செல்லாது என்று சொன்னாலும் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI